<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

2022–ஆம் வருடம் மே மாதம் 09–ஆம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : .05.2022

தலைவர்,
நகர் மன்றம்.

<u>பொருள்கள்</u>

( 1 ) வருகின்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை நினைவுப்படுத்தும் வகையில் முன்னால் முதல்வர் அரசியல் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருவுருவ சிலையை நிறுவதற்கும், டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நூற்றாண்டு வளைவு வைப்பதற்கும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

டாக்டர் கலைஞர் அவர்களது திருவுருவ சிலை அமைக்கவும், நூற்றாண்டு நினைவு வளைவு அமைக்கவும் அரசு அனுமதி பெற முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(1341/22/பி1)

**தீர்மானம் எண். 41**

அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 17 வருதன் தெருவில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதை எடுத்துவிட்டு புதிய சிறுபாலம் அமைக்கவும், பழுதடைந்த தண்ணீர் தொட்டியினை சரிசெய்து குழாயமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்) பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1432/22/இ1)

**தீர்மானம் எண். 42**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி குடிநீர் பிரிவில், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் பதிவேற்றம் செய்யவும், குடிநீர் / பாதாள சாக்கடை கட்டண கேட்பு அறிவிப்புகள் பிரிண்ட் எடுக்கவும் Lenovo All in one கணினி ஒன்றும் Printer with xerox ஒன்றும் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

கணினி மற்றும் பிரிண்டர் அரசு தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் (GeM) வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1448/22/இ1)

**தீர்மானம் எண். 43**

அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சி குடிநீர் பிரிவில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வீட்டு இணைப்புகள் கேட்பு அறிவிப்புகள் பிரிண்ட் எடுத்து இணைப்புதாரர்களுக்கு சார்வு செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, கேட்பு அறிவிப்புகள் மற்றும் வார்டுவாரியான Hand Book பிரிண்ட் எடுக்கவும் Multi purpose printer with Xerox இயந்திரம் ஒன்று அரசு தரப்படுத்தப்பட்ட (GeM) விலை விகிதத்தில் வாங்கிக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 2,50,000/– நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அலுவலகப் பணியின் அத்தியாவசியத்தினைக் கருதி ரூ. 2,50,000/– அரசு தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் Multipurpose Xerox printer வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1448/22/இ1)

**தீர்மானம் எண். 44**

அனுமதிக்கப்பட்டது.

(5) இந்நகராட்சி பொதுப் பிரிவில் இயங்கி வந்த பிரிண்டர் பழுதடைந்து விட்டதால் புதிய பிரிண்டர் ஒன்று அரசு தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் (GeM) (CANON LBP 2900 Printer) வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1504/22/இ1)

**தீர்மானம் எண். 45**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட வார்டுகளில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறு கைப்பம்புகள் 30 ஆண்டுகளுக்கு பழமையான 4 1/2 (இரும்பு குழாய்) கேசிங் பைப்பில் அமைக்கப்பட்டுள்ளதால் தற்போது துருப்பிடித்து மீண்டும் பைப் மேலே ஏற்றி பழுது சரி செய்ய இயலாத நிலையில் உள்ளது.

1) வார்டு எண். 3 – சுவாமி சிவானந்தா சாலை முத்தமிழ் பள்ளி எதிரில்
2) வார்டு எண். 12 – புதுத்தெரு மற்றும் சிங்கான் சந்து
3) வார்டு எண். 11 – பாச்சி தெரு
4) வார்டு எண். 6 – பிற்பட்டோர் காலனி
5) வார்டு எண். 20 – காளியம்மன் கோவில் தெரு
6) வார்டு எண். 24 – திருவேங்கடவிலாஸ் பள்ளி தெரு
7) வார்டு எண். 26 – சபாபதி மில் தெரு, காந்தி நகர்
8) வார்டு எண். 5 – நெசவாளர் காலனி

மேற்க்கண்ட கைப்பம்புடன்கூடிய ஆழ்துளைக் கிணறுகள் பயன்பாட்டில் இல்லாததாலும் போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ள காரணத்தாலும் அவற்றை அகற்றவும், மேலும் அவற்றில் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் பயன்படுத்தவும் மீதியுள்ள பயன்படுத்த முடியாத பொருட்கள் பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1522/22/இ2)

**தீர்மானம் எண். 46**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி சொத்துவரி சீராய்வு 2022 தொடர்பான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சுய மதிப்பீட்டுப் படிவம் – 1 குடியிருப்பு கட்டடங்களுக்கு (இளம் நீல நிறம்), படிவம் – 2 வணிக பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு (இளம் சிவப்பு நிறம்), படிவம் – 3 தொழிற்சாலை பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு (வெள்ளை நிறம்), படிவம் – 4 சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு (இளம் பச்சை நிறம்), படிவம் – 5 காலிமனைகளுக்கு (இளம் மஞ்சள் நிறம்) ஆகிய இனங்களுக்கு அச்சடிக்கவும் நாமக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மற்றும் இதர செலவினத்திற்கு உத்தேச செலவினத் தொகை ரூ. 2,50,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1420/22/அ1)

**தீர்மானம் எண். 47**

நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பொது மக்கள் மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டு, குப்பைகள் பொதுமக்களிடமிருந்து பெறும்போது அதில் சேகரிக்கப்பட்ட மின் கழிவுகள், Flourecent Tube lights இருப்பு உள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன்படி மின் கழிவுகளை மறு சுழற்சிக்கும், Flourecent Tube light-களை இறுதி செய்யவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் அங்கீகாரம் பெற்ற மறு சுழற்சியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதன்படி பயனற்ற மின் கழிவுகள் மற்றும் பயனற்ற Flourecent Tube light ஒப்படைப்பு செய்ய கோயமுத்தூர் Green Era Recycler's நிறுவனத்தில் விலைப்புள்ளிகள் கேட்கப்பட்டு 06.04.2022–இல் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பயனற்ற மின் கழிவுகள் 1 கிலோ ரூ. 10.00 வீதம் எடுத்துக் கொள்வதாகவும் பயனற்ற CFL / Flourecent / LED Tube light / Bulbs fittings மேற்படி நிறுவனம் எடுத்துக் கொள்வதற்கு 1 கிலோவிற்கு ரூ. 150/– நகராட்சி மூலம் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது நகராட்சியில் இருப்பு வைக்கப்பட்டுள்ள பயனற்ற மின் கழிவுகள் மற்றும் பயனற்ற Flourecent Tube light ஆகியவற்றை மறு சுழற்சிக்காக கோயமுத்தூர் Green Era Recycler's நிறுவனத்தில் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 1,25,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(3909/21/எச்1)

**தீர்மானம் எண். 48**

அனுமதிக்கப்பட்டது.

(9) இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகப் பணிகள் காரணமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள ஆகும் பயணப்படி செலவினங்கள் 2022–23–ஆம் நிதியாண்டிற்கு உத்தேசமாக ரூ. 3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1734/22/பி1)

**தீர்மானம் எண். 49**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இந்நகராட்சி அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான பதிவேடுகள், படிவங்கள் மற்றும் எழுதுப்பொருட்கள் 2022–23–ஆம் நிதியாண்டிற்கு வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 2,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1735/22/பி1)

**தீர்மானம் எண். 50**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 23, வினையத்தான் தெருவில் அமைந்துள்ள உபயோகமற்ற உப்புநீர் (2000 லிட்டர்) சின்டெக்ஸ் டேங்க் அப்பகுதி பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதால் சின்டெக்ஸ் டேங்கினை அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(5019/22/இ2)

**தீர்மானம் எண். 51**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 17, பெருமாள் கோவில் அருகிலுள்ள சின்டெக்ஸ் பிளாட்பாரம் பழுதடைந்து உவர்நீர் டேங்கில் ஏற்றி தண்ணீர் வழங்க முடியாமலுள்ளது மற்றும் மோட்டார் மீட்டர் போர்டு பழுது சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 40,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1733/22/இ2)

**தீர்மானம் எண். 52**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 20, 26 மற்றும் 5 ஆகியப் பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டப் பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறு மூலம் உப்புநீர்

வசதி ஏற்படுத்த பைப்லைன் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.65 இலட்சம் குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) வார்டு 20 – காளியம்மன் கோவில் தெரு – உப்புநீர் பைப்லைன் அமைத்தல்
2) வார்டு 26 – காந்தி நகர் ஏரிக்கு வடக்கு பிளாக் – 1 – பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல்
3) வார்டு 5 – ராமசாமி தோட்டம் – பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல்
4) வார்டு 4 – வடக்கு காலனி மாரியம்மன் கோவில் அருகில் 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங் மாற்றுதல்
5) வார்டு 14 – சைனிகர் மண்டபம் அருகில் 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங் மற்றும் பிளாட்பாரம் பழுது சரிசெய்தல்
6) வார்டு 14 – சந்துவீரி தெரு
7) வார்டு 14 – காஞ்சி கிருஷ்ணன் சந்து 1000 லிட்டர் டேங் மாற்றுதல்

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1458/22/இ2)

**தீர்மானம் எண். 53**

மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களிலுள்ள சுலீஸ் வால்வு செக்நட் மற்றும் ராடு மறை போடுதல் பணி மேற்க்கொள்ள 20.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.50 இலட்சம்.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி.நகர் ரோடு எண்.17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.56 % அதிகம்.
2) திருமதி சாகிதா, க/பெ. ரிஜ்வான், 70எ, வி.நகர் ரோடு எண். 10, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.28 % குறைவு.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா, க/பெ. ரிஜ்வான் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1260/22/இ2)

**தீர்மானம் எண். 54**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்க்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சி குடிநீர் நிதியின்கீழ் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்ய தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்ய குழாய் 1 மீட்டர் மற்றும் உதிரி பாகங்கள் ஒன்று என்ற விகிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலைப்பட்டியலின்படி 89 பொருட்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சம்.

1) சண்முகா எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் – ரூ. 23,461/–
2) திரு ஆர். பெரியசாமி, மசக்காளிப்பட்டி – ரூ. 23,716/–

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள சண்முகா எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

குறைவான விலைவிகிதம் அளித்துள்ள சண்முகா எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1286/22/இ2)

**தீர்மானம் எண். 55**

அனுமதிக்கப்பட்டது

(16) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் வார்டு எண். 4, 8, 9, 15, 26 மற்றும் 27 பகுதிகளில் அமைந்துள்ள திறந்தவெளிக் கிணறுகளை சுத்தம் செய்தல் தொடர்பாக 20.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 40,000/–

1) திருமதி சாகிதா, க/பெ. ரிஜ்வான், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.50 % குறைவு.
2) திரு என். செல்லப்பன், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 2.50 % அதிகம்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா, என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி சாகிதா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1305/22/இ2)

**தீர்மானம் எண். 56**

அனுமதிக்கப்பட்டது

( 17 ) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் வார்டு எண். 17, வி. நகர் ரோடு எண். 17–இல் பாதாள சாக்கடை குழாய் நீட்டிப்பு செய்தல் மேற்கொள்ள 20.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 83,000/–

1) திருமதி சாகிதா, க/பெ. ரிஜ்வான், 70எ, வி.நகர் ரோடு எண். 10, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.22 % குறைவு.

2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி.நகர் ரோடு எண்.17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.55 % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி சாகிதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1287/22/இ2)

**தீர்மானம் எண். 57**

அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது.

( 18 ) இராசிபுரம் நகராட்சி அலுவலக முதல் தளத்திலுள்ள கழிப்பிடம் புதுப்பித்தல் பணி வருவாய் நிதியின்கீழ் மேற்க்கொள்ள 20.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.20 இலட்சம்.

1) திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.54 % குறைவு.
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.44 % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். சாகிதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1324/22/இ1)

**தீர்மானம் எண். 58**

அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது.

( 19 ) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் கூடுதல் கணினி வசூல் மையம் அமைத்தல் பணி வருவாய் நிதியின்கீழ் மேற்க்கொள்ள 20.04.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 42,000/–

1) வர்ஷா குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன், நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.21 % குறைவு.
2) கே.ஜி. சீனிவாசன், வீசாணம், நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.62 % அதிகம்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வர்ஷா குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வர்ஷா குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1336/22/இ1)

**தீர்மானம் எண். 59**

அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது.

(20) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் நிதியின்கீழ் நகர்மன்றத் தலைவர் அறைக்குத் தேவையான மேசை நாற்காலிகள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் செய்தல் பணிக்கு **20.04.2022** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. **7.60** இலட்சம்.

1) திரு ஏ. அருண்குமார், ABC Associates, 115/1, பிடமனேரி ரோடு, தர்மபுரி – மதிப்பீட்டைவிட **1.73** % குறைவு.
2) Express Power Solutions, L1/99, அழகு நகர், நாமக்கல் – மதிப்பீட்டைவிட **3.09** % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஏ. அருண்குமார், ABC Associates-இன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஏ. அருண்குமார், ABC Associates-இன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1217/22/இ1)

**தீர்மானம் எண். 60**

அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது.

(21) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற கூடத்திற்கு தேவையான மேசை நாற்காலிகள் மேடை அமைப்புகள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் செய்தல் பணி மேற்க்கொள்ள **20.04.2022** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. **9.60** இலட்சம்.

1) ஏ. அருண்குமார், ABC Associates, 115/1, பிடமனேரி ரோடு, தர்மபுரி – மதிப்பீட்டைவிட **0.68** % குறைவு.
2) Express Power Solutions, L1/99, அழகு நகர், நாமக்கல் – மதிப்பீட்டைவிட **5.73** % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஏ. அருண்குமார், ABC Associates-இன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஏ. அருண்குமார், ABC Associates அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(1216/22/இ1)**

**தீர்மானம் எண். 61**

அனுமதிக்கப்பட்டது.

( 22 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு **20.04.2022** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. **9.70** இலட்சம்.

**1)** அசோக் கன்ஸ்ட்ரக்ஷன், துறையூர் ரோடு, நாமக்கல் – மதிப்பீட்டைவிட **2.40** % அதிகம்.
2) அஞ்சனி கன்ஸ்ட்ரக்ஷன், பரமத்தி, நாமக்கல் – மதிப்பீட்டைவிட **0.80** % குறைவு.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அஞ்சனி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அஞ்சனி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(1288/22/இ1)**

**தீர்மானம் எண். 62**

ஏற்க்கப்பட்டது.

( 23 ) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள பணியாளர்கள் கழிப்பிடம் புதுப்பித்தல் பணிக்கு வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள **20.04.2022** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. **3.00** இலட்சம்.

**1)** திரு ஆர். பிரகாசம், மசக்காளிப்பட்டி, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட **0.03** % குறைவு.
**2)** திரு ஆர். பெரியசாமி, மசக்காளிப்பட்டி, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட **0.52** % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். பிரகாசம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். பிரகாசம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(1326/22/இ1)**

**தீர்மானம் எண். 63**

அனுமதிக்கப்பட்டது.

(24) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் நகர் மன்ற கூடத்திற்கு தேவையான ஒலிவாங்கி, ஒலிபெருக்கி உள்ளிட்ட மின் சாதனங்கள் விநியோகத்தில் பணி மேற்கொள்ள 20.04.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு. மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.50 இலட்சம்.

1) திருமதி ஆர். சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – ரூ. 1,49,500.00
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – ரூ. 1,51,100.00

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி சாகிதா, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். சாகிதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1325/22/இ1)

**தீர்மானம் எண். 64**

அனுமதிக்கப்பட்டது.

(25) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளி பழுதடைந்த கட்டடத்தை இடித்து மீதமுள்ள பழையப் பொருட்கள் 30.03.2022 அன்று ஏலம் விடப்பட்டது. அதில் கீழ்க்கண்டுள்ள நபர்கள் கலந்து கொண்டு ஏலம் கூறினார்கள்.

1) திரு கே.ஜீ. சீனிவாசன், 1எ, எம்.ஜி.ஆர். நகர், வீசாணம்
2) திருமதி ஆர். ஷாகிதா, 7எ/1, வி. நகர் ரோடு எண். 10, இராசிபுரம்.
3) வர்ஷா குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்சன், நாமக்கல்.

மேற்க்காணும் நபர்களில் திரு கே.ஜீ. சீனிவாசன் என்பவர் அதிகபட்சமாக ரூ. 16,100/–க்கு ஏலம் கோரியுள்ளார். அன்னாருக்கு கட்டட பழையப் பொருட்களை வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அதிகபட்ச கேள்வித் தொகை ரூ. 16,100/– கோரிய திரு கே.ஜீ. சீனிவாசன் அவர்களது ஏலத்தினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1749/19/இ1)

**தீர்மானம் எண். 65**

அனுமதிக்கப்பட்டது.

(26) இராசிபுரம் நகராட்சி தினசரி அங்காடியிலுள்ள பழுதடைந்த கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்த 30.03.2022 அன்று ஏலம் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டவர்கள் விவரம் வருமாறு.

1) திருமதி ஆர். ஷாகிதா, 7எ/1, வி. நகர் ரோடு எண். 10, இராசிபுரம்.
2) வர்ஷா குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்சன், நாமக்கல்.
3) திரு கே.ஜீ. சீனிவாசன், 1எ, எம்.ஜி.ஆர். நகர், வீசாணம்

மேற்க்காணும் ஏலதாரர்களில், திரு கே.ஜீ. சீனிவாசன் என்பவர் ரூ. 64,800/– நகராட்சியிலிருந்து வழங்கும்பட்சத்தில் தினசரி அங்காடி பழுதடைந்த கட்டடத்தினை இடித்து அனைத்துப் பொருட்களையும் (பயன்படுத்தக் கூடியது மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள் அனைத்தையும்) அப்புறப்படுத்த ஏலம் கோரியுள்ளார். அன்னாரது ஏலத்தினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

திட்டப் பணியின் அவசியம் கருதி திரு கே.ஜீ. சீனிவாசன் என்பவர் கோரிய தொகை ரூ. 64,800/– வழங்கி தினசரி அங்காடி கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(3872/21/இ1)

**தீர்மானம் எண். 66**

அனுமதிக்கப்பட்டது.

(27) மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் 13.04.2022–ஆம் தேதிய கூட்ட அறிவுரைகளின்படியும், துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், நாமக்கல் அவர்களின் 18.04.2022–ஆம் தேதிய மின் அஞ்சல் செய்தியின்படியும் 19.04.2022–ஆம் தேதி இராசிபுரம், அண்ணாசாலை, அரசு மேல்நிலைப் பள்ளியில் நகராட்சி சார்பில் ஸ்டால் அமைக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சாமியானா பந்தல் அமைத்து, பிளாஸ்டிக் விழிப்புணர்வு, மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் பிரித்து வழங்குதல், நுண்ணுயிர் செயலாக்க மையம் தொடர்பான பிளக்ஸ் பேனர் மற்றும் கலைப்பொருட்கள் தயார் செய்யவும் உத்தேச செலவினம் ரூ. 17,700/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ குமரன் 24 x 7 பிளக்ஸ் பிரிண்டிங், இராசிபுரம் நிறுவனத்தில் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1543/22/எச்1)

**தீர்மானம் எண். 67**

அனுமதிக்கப்பட்டது.

(28) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி வாகனம் எண். TN 28 AS 0104 கிளட்ச் பிளேட் பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலையில், இராசிபுரம், ஆத்தூர் மெயின் ரோடு, கார்த்திகேயா மோட்டார்ஸ் & ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் செலவினப்பட்டியல் பெறப்பட்டது. கிளட்ச் பிளேட் புதியதாக மாற்றவும் லேபர் சார்ஜ் உட்பட ரூ. 13,830/–ஆகும். எனவே, மேற்படி வாகனத்தின் பழுதுகளை இராசிபுரம், ஆத்தூர் மெயின் ரோடு, கார்த்திகேயா மோட்டார்ஸ் & ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பழுதுகளை சரிசெய்யவும், உத்தேச செலவினம் ரூ. 13,830/–ற்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பழுதுகள் சரிசெய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(1779/22/எச்1)

**தீர்மானம் எண். 68**

அனுமதிக்கப்பட்டது.

(29) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட நகர வரைபடம், புதிய வார்டு எல்லைகள் (Delimitation வரைபடத்தின்படி) Town map ஆகியவற்றினை தூய்மை இந்தியா Swachhatam M/S Portal –இல் பதிவேற்றம் செய்து, அதன் தொடர்ச்சியாக பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் Shape file அல்லது KML file ஆக பதிவேற்றம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண். 925/15/பி1, நாள் 15.02.2022–இன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி மேற்படி Delimitation வரைபடம், Town map மற்றும் 27 வார்டுகளின் எல்லைகள் ஆகியவற்றினை KML file ஆக தயார் செய்து M/S Portal –இல் பதிவேற்றம் செய்யும் பணியினை G.K. Anu, Geospectial Survey Consultants, சென்னை அவர்களின் வழியாக செய்யப்பட்டது. இப்பணிக்கு மேற்படி நிறுவத்திடமிருந்து பெறப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ. 8,000/–ஐ வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(828/22/எப்1)

**தீர்மானம் எண். 69**

அனுமதிக்கப்பட்டது.

(30) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு எண். TN 28 AT 4555 வாகனத்தின் ஆயில் சர்வீஸ், எரிபொருள் கசிவு உள்ளிட்டப் பணிகளை மேற்க்கொள்ள மகேந்திரா நிறுவனமான SKS Auto Mobile, நாமக்கல் நிறுவனத்தில் பணி மேற்க்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 18,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று பழுது நீக்கம் செய்யப்பட்டதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளப்பட்டதற்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

ஈப்பு எண். TN 28 AT 4555 பழுதுகளை நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று நாமக்கல், SKS Auto Mobiles நிறுவனத்தில் மேற்க்கொள்ளப்பட்டதற்கும், தொகை வழங்கியதற்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(1492/22/இ2)

**தீர்மானம் எண். 70**

அனுமதிக்கப்பட்டது.

( 31 ) இராசிபுரம் நகராட்சி, வார்டு–சி, பிளாக்–1, நகரளவை எண். 4/113, 18–இல் 1.03 1/4 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு அனுமதி கோரி மனுதாரர் திரு பி . மனோகரன் மற்றும் ராஜா, என்பவர்கள் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 1413/2021 நா.மா., நாள் 22.02.2022–இல் சாலைகளை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்தும் மற்றும் பொது ஒதுக்கீடு சாலை அமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின்கம்பம் வசதிகள் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது உபயோகம் 18.30 ச.அடி. சாலைகள் 1440.33 சதுரடியும் தானசாசன ஆவண எண். 5347/2021 நாள் 20.10.2021–இன் மூலமாக இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானபத்திரம் மூலமாக பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிறைவேற்றப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்றமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(4350/21/எப்1)**

**தீர்மானம் எண். 71**

அனுமதிக்கப்பட்டது.

( 32 ) மனுதாரர்கள் திரு.பி.மனோகரன் மற்றும் ராஜா, என்பவர்கள் இராசிபுரம் நகராட்சி வார்டு–சி, பிளாக்.1, நகர புல எண்.4/113, 118–இல் 1.03 1/4 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் கோரி விண்ணப்பித்துள்ள பிரேரணை நகர் ஊரமைப்புத் துறை, உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உதலி இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது கடிதம் ந.க.எண்.1413/2021 நா.மா., நாள்.22.02.2022–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை ஒப்படைக்க தெரிவித்து சாலை அமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில் கடிதத்தில் தெரிவித்துள்ளளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் பகிர்மான குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின்கம்பம் அமைப்பப்பட்டும் தெரு விளக்குகள் அமைப்பப்பட்டள்ளது என நகராட்சி பொறியாளரால் 08.04.2022 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது உபயோகம் பரப்பளவு 18.30 ச.மீ மற்றும் சாலைகள் 1440.33 ச.மீ பரப்பளவினை தானசாசன ஆவண எண். 5347/2021 நாள்.20.10.2021–இல் இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானமாக பத்திரம் பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்இ நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.1413/2021 நா.மா. நாள் 22.02.2022 தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு ம.வ./ந.ஊ(நாமா) எண்.28/2022 என எண்ணிட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின் பேரில் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்ககப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.1413/2021/நா.மா. நாள்.22.02.2022–இல் மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின்பேரில் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4350/21/எப்1)

**தீர்மானம் எண். 72**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.